**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 97/2023 P.W. 4.L.W.10**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. கிறிஸ்டி** | **Caste** | : | |
| **Father's Name** | : | | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 14.06.2023.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை** :

1. நான் தற்பொழுது குளச்சல் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். குளச்சல் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த மோகன் ஜோஸ்லி என்பவரைத் தெரியும். உதவி ஆய்வாளர் அவர்கள் நிலையப் பொறுப்பில் இருக்கும் போது 14.10.2022 ம் தேதி மதியம் 12.00 மணி அளவில் இவ்வழக்கின் புகார்தாரரான கோணங்காட்டைச் சார்ந்த ராதிகா என்பவரின் புகாரைப் பெற்று மேற்படி புகாரின் தன்மைக்கேற்ப குளச்சல் காவல்நிலையக்குற்ற எண். 247/2022 ச/பி. 392 இ.த.ச 1860 ன் கீழ் வழக்குப்பதிவு செய்து வைத்த முதல் தகவல் அறிக்கையை எனது பார்வைக்கு வைத்தார். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அசாஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2) மேற்படி வழக்கு கோப்பை ஆய்வாளராகிய நான் எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 14.10.2022 ம் தேதி சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 மற்றும் பார்வை மகசர் அ.சா.ஆ.7 ஆகும்.** சாட்சிகளிடம் கையொப்பமும் பெற்றேன்.

3) வழக்கின் புகார்தாரரான ராதிகா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுச்செய்தேன். மேற்படி சம்பவத்தை கேள்விபட்ட சாட்சிகளான பிரபுராஜ், பிரின்ஸ் ராஜ், ராஜன் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும், இவ்வழக்கின் சம்மந்தப்பட்ட எதிரியைத் தேடி 31.12.2022 ம் தேதி காலை 05.00 மணிக்கு நானும் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் செல்வின் ஜோஸ், முதல்

நிலை காவலர் பிபின் பிரபாகர், முதல் நிலை பெண் காவலர் சுடலைமுத்து ஆகியோர் சகிதம் குளச்சலில் இருந்து மண்டைக்காடு செல்லும் ரோட்டில்வெட்டுமடை இசக்கியம்மன்கோவில் அருகில் வாகன தணிக்கைசெய்துக்கொண்டிருந்தோம்.

4. அப்போது கிழக்கிலிருந்து மேற்காக டி.என் 74. AX.4092 பஜாஜ் பல்சர் என்ற இருசக்கர வாகனத்தில் வந்துக்கொண்டிருந்து போலீஸ் பார்ட்டியை கண்டதும் திரும்பி செல்ல முயன்ற ஊர் பெயர்கேட்டுத் தெரிந்த கப்பியறை நகர பொற்றவிளை தற்சமயம் ஏ.ஜே.கே. காம்பிளக்ஸ் காவல்கிணறு விலக்கு மரியதாஸ் மகன் ஷாபுமோன், வயது 37 மற்றும் பின்னால் இருந்த அழகியபாண்டியபுரம் முகமது அலி மகள் நூர்ஜகான், வயது 43 ஆகியோர்களைசுற்றி வளைத்து பிடித்து அந்த வழியாக வந்த ஆஜர் சாட்சிகள் ரீத்தாபுரத்தைச் சேர்ந்த ஜெகதீஸ், இரும்பிலியைச் சேர்ந்த அறிவழகன் ஆகியோர்கள் முன்னிலையில் விசாரித்தபோது மேற்படி எதிரிகளில் 1வது எதிரி ஷாபுமோன் என்பவர் எவ்வித துன்புறுத்தலோ ஆசை வார்த்தைகள் இன்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தைப் பதிவுச் செய்தேன்.

5. விசாரணை முடித்து குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது 392 இ.த.ச 1860 ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>குறுக்கு விசாரணை</u> : <u>குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்</u>**

இந்த வழக்கில் சம்பவம் தொடர்பாக ஒருநாள் கழித்து தான் புகார் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் - சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்ட இடத்திற்கு எதற்காக சென்றோம் என்றால் - குற்றம் சுமத்தப்பட்ட நபரை பிடிப்பதற்காக சென்றோம். மேற்படி நபர் அந்த வழியாக யாரும் தகவல் சொன்னார்களா என்றால் ரகசிய தகவல் கிடைத்தது.

2. புகார் கொடுத்த தினத்தன்று குற்றவாளி யார் என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். நான் நின்ற சாலை கிழக்கு மேற்கான சாலை. நான் என்னுடன் எதுவும் எடுத்துச் சென்றேனா என்றால் - மடிக்கணிணி எடுத்துச் சென்றேன். மேற்படி மடிக்கணிணி அரசாங்கத்திற்கு சொந்தமானது. ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் எனது வாகனத்தில் வந்தார்களா என்றால் - இல்லை. ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கப்பட்ட இடத்தில் அவர்கள் வந்தார்கள். அவர்கள் மேற்படிஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் நடந்து வந்தார்களா, சைக்கிளில் வந்தார்களா அல்லது இருசக்கரவாகனத்தில் வந்தார்களா என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

3. நான் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றதாக சொல்லப்படும் இடம் இருட்டான பகுதி என்றால் சரிதான். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தை யார் தட்டச்சு செய்தார் என்றால் பிபின் என்ற முதல்நிலைகாவலர் தான் தட்டச்சு செய்தார். தட்டச்சு செய்ததை காவல்நிலையம் சென்று தான் நாங்கள் பிரிண்ட் அவுட் எடுத்தோம் என்றால் சரியல்ல. மண்டைக்காடு ஜங்சனில் ஜெராக்ஸ் கடை இருந்தது. அங்குச் சென்று பிரிண்ட் அவுட் எடுத்தோம்.

4. நான் நேரடியாக மேற்படி ஜெராக்ஸ் கடைக்கு சென்றேனா என்றால் - ஆம் சென்றேன். மேற்படி கடையின் பெயர் என்ன என்றால் சற்று இருட்டாக இருந்ததால் பெயர் தெரியவில்லை. மேற்படி கடையில் யார் பிரிண்ட் அவுட் எடுத்துக்கொடுத்தார்கள் என்றால் ஒரு ஆண் எடுத்துக் கொடுத்தார். மண்டைக்காடு பகுதியில் அதிகாலை 5.00 மணிக்கு எங்காவது ஜெராக்ஸ் கடை திறந்திருக்குமா என்றால் - திறந்திருந்தது.

5. மேற்படி ஜெராக்ஸ் கடைக்கு குற்றம் சுமத்தப்பட்ட நபரை நான் அழைத்துச் சென்றேனா என்றால் - அழைத்துச் சென்றேன். சாட்சிகளையும் எனது வாகனத்தில் அழைத்துச் சென்றேனா என்றால் - ஆம் அழைத்துச் சென்றேன். மேற்படி ஜெராக்ஸ் கடை சம்மந்தமான சங்கதிகளை நான் பதிவுச் செய்த வாக்குமூலங்களில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை.

6. நாங்கள் மேற்படி ஜெராக்ஸ் கடையிலிருந்து எத்தனை மணிக்கு கிளம்பினோம் என்றால் - 7.00 மணிக்கு கிளம்பினோம். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பத்தை ஜெராக்ஸ் கடையில் வைத்து வாங்கினேனா அல்லது ஒப்புதல் வாக்குமூலம் பதிவுச் செய்ததாக சொல்லப்படும் இடத்தில் வைத்து வாங்கினேனா என்றால் ஜெராக்ஸ்கடையில் வைத்து தான் வாங்கினேன். மேற்படி ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் ஜெராக்ஸ் கடையில் கையொப்பம் பெறவில்லை என்றும் ஒப்புதல் வாக்குமூலம் பதிவுச் செய்யப்பட்டதாக சொல்லப்பட்ட இடத்தில் வைத்து தான் சாட்சி கையொப்பம் செய்துக் கொடுத்ததாக சாட்சியம் அளித்திருந்தால் - அது தவறு. ஜெராக்ஸ் கடையில் வைத்து தான் போட்டுக்கொடுத்தார்கள்.

7. மேற்படி ஜெராக்ஸ் கடையில் இருந்து நாங்கள் நேராக எங்கு சென்றோம் என்றால் - நேராக ஆரல்வாய்மொழிக்கு சென்றோம். என்னுடன் எத்தனை பேர்கள் வந்திருந்தார்கள் என்றால் என்னையும் சேர்த்து 5 போலீசார் மற்றும் குற்றம்

சுமத்தப்பட்ட நபர். எந்த வாகனத்தில் சென்றோம் என்றால் எங்கள் நிலைய வாகனமாக டி.என் 74.ஜி. 571 என்ற வாகனத்தில் சென்றோம்.

8 மண்டைக்காட்டில் உள்ள மேற்படி ஜெராக்ஸ் கடையில் இருந்து வேறு எதுவும் இந்த வழக்கு சம்மந்தமாக அந்தயிடத்தில் கைப்பற்றினோமா என்றால் - உளி, ரெயின் கோர்ட், சுமார் 25 பவுன் நகை, 4 செல்போன், ஒரு பைக் ஆகியவற்றை கைப்பற்றினேன். மேற்படி நகையைப் பொறுத்து அதன் எடையை எவ்வாறு நிர்ணயம் செய்தேன் என்றால் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் சொன்னதின் அடிப்படையில் தான். மேற்படி 4 செல்போனில் இருந்த சிம்கார்டுகள் யார் பெயரில் இருந்தது என்றால் தெரியாது. அதை நீதிமன்றத்தில் ஒப்படைத்துவிட்டேன்.

9. அதிகாலை நேரத்தில் நகையை கைப்பற்றியதாக சொல்லியது தொடர்பாக அது தங்க நகை தான் என்று நான் எவ்வாறு உறுதி செய்துக்கொண்டேன் என்றால் குற்றம் சுமத்தப்பட்ட நபர் சொன்னார். எனக்கும் தெரியும். சிறுவயதில் இருந்து நான் தங்கம் புழங்கி வருகிறேன். மேற்படி 25 பவுன் நகை என்ன என்ன என்று எனக்கு தெரியுமா என்றால் தற்சமயம் எனக்கு ஞாபகமில்லை.

10. மேற்படி நாங்கள் பயன்படுத்திய வாகனம் அன்றையதினம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக சொல்லப்பட்ட இடத்திலிருந்து நேரடியாக ஆரல்வாய்மொழிக்கு தான் சென்றது என்பதற்கான ஆவணங்கள் எங்கள் நிலையத்தில் உள்ளது என்று சொன்னால் சரிதான். அதனை தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெற்று பார்த்தால் தெரியும் என்றால் - ஆம் தெரியும்.

11. ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளை ஆரல்வாய்மொழிக்கு அழைத்துச் சென்றேனா என்றால் - ஆம் சென்றோம். அப்படி மேற்படி வாகனத்தில் 9 பேர்கள் சென்றோம் என்றால் சரிதான். முதலில் காவலர்கள் 5 பேர் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் 2 பேர் என்று மொத்தம் 7 பேர் என்று சொல்லிவிட்டு தற்போது ஏதோ உள் நோக்கத்துடன் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு எதிராக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

12. இந்நீதிமன்றத்தில் நான் 7 பேர்கள் என்று சொல்லியிருந்தால் அது தவறு. மேற்படி மண்டைக்காடு ஜெராக்ஸ் கடையிலிருந்து இரு குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை நான் எனது வாகனத்தில் அழைத்துச் சென்றேன் என்றால் - சரிதான். குற்றம் சுமத்தப்பட்ட நபர்களில் ஒரு பெண் நபர் இருப்பதை பொறுத்து நான் பெண் காவலர் யாரையும் அழைத்துச் சென்றோனா என்றால் அழைத்துச் சென்றேன்.

13. ஆரல்வாய்மொழிக்கு செல்லும்போது எங்கே டிபன் சாப்பிட்டோம் என்றால் - ஞாபகமில்லை. மேற்படி அத்தாட்சியில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் இருசக்கர வாகனத்தை ஜெராக்ஸ் கடையில் விட்டுச் சென்றோம் என்றால்-சரிதான். ஒப்புதல் வாக் குமூலம் பெறப்பட்டதாக சொல்லப்படும் இடத்திற்கும் மேற்படி ஜெராக்ஸ் கடைக்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 20 மீட்டர் தூரம் தான் இருக்கும். ஜெராக்ஸ் கடைக்கு எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் கிட்டதட்ட 07.00 மணிக்கு சென்றிருப்போம். 07.00 மணி நல்ல வெளிச்சம் என்றால் சரிதான். அப்போதும் நான் கடையின் பெயரை பார்க்கவில்லைஎன்று சொன்னால் சரிதான்.

14 மேற்படி ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் வந்த வாகனம் என்ன என்றால் அது குறித்து எனக்குத் தெரியாது. மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக சொல்லப்படும் இடத்தை தவிர்த்து எங்கும் செல்லவில்லை என்று சாட்சியம் அளித்திருந்தால் அது - சரியல்ல. மேற்படி சாட்சிகள் ஜெராக்ஸ் கடைக்கு சென்றோம் என்று சொல்லாமல் இருந்திருந்தால் அது தவறு. மேற்படி சாட்சிகள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக சொல்லப்படும் இடத்தில் வைத்து தான் கையொப்பம் போட்டுக்கொடுத்ததாக சொல்லியிருந்தால் அது தவறு.

நேரத்தின் தன்மை கருதி மேற்படி குறுக்கு விசாரணை 16.06.2023 ம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

---

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.